முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1414

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

13.08.2023, ஞாயிற்றுக்கிழமை

1. கருணைக்கடலே அரங்கா
கலியின் துன்பம் நீக்கவந்த தேசிகா
பெருமைமிக்க ஞான உலகம் படைக்க
பிரணவக்குடில் படைத்த குருராஜா
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு
சுப்ரமணியர் யானும் அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் ஆடி மாதம் 28 ம் நாள், 13.08.2023 ஞாயிற்றுக்கிழமை)
வருங்காலம் ஞான ஆட்சிக்காண வேண்டுமென
வல்லமையோடு ஞானவான்களை உருவாக்க
3. ஆக்கவே சன்மார்க்க ஞானமருளி
அகிலமெங்கும் அறத்தை நிரப்பி வருகின்ற
ஆக்கபூர்வ ஞான சேவையாற்றி
அழியாமையிலிருந்து மக்களை மீட்கவந்த அரங்கனே
4. அரங்கனே உந்தனுள் யானிருக்கேன்
ஆற்றல்கூட்டி உன் நோக்கம் பூர்த்திசெய்வேன்
சிந்தைபட உன்வழி வரும் மக்களெல்லாம்
செவிசாய்த்து சன்மார்க்கநெறி பிறழாவண்ணம்
5. வண்ணமுடன் தர்மத்தை கையில் எடுத்தால் போதும்
வையகம் பாதுகாப்பாக மாறும்
மாற்றமென ஆளுமைகளெல்லாம்
மண்ணை கவ்வும் வண்ணம்
6. மண்ணுலகில் ஆற்றல்பட சன்மார்க்கநெறி
ஆன்மீக அரசியல் களமாகத்தேறி
தேறியே உலகம் நல்பாதுகாப்புப் பெறும்
திருவருளாக என்னருள் உலகமெல்லாம் நிரம்பி

7. நிரம்பி உன் தொண்டர்களுக்குள்
ஞானமாக இறங்கி தொண்டர்கள் வழி சாமான்யர்க்கும் சென்று
தேசிகன் சன்மார்க்கம் இந்த உலகை ஆளும்
தெய்வநெறியே இந்த உலகுக்கு பாதுகாப்பாய் இருக்கும்

8. ஆகவே அன்பர்கள் ஒன்றிணைய
அரங்கன் நோக்கி அகிலத்தார் வந்து இணைய
வகைபட ஆறுமுகன் யான் வகை செய்வேன்
வல்லமைகூட்டி அரங்கனுக்கு வந்த நோக்கத்தை பூர்த்தி செய்வேன்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–